# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8029178

1. District : மாவட்டம் தூத்துக்குடி

PS: லஞ்ச ஒழிப்பு (ம) கண்காணிப்பு காவல்நிலையம் தூத்துக்குடி

Year: ஆண்டு 2019 FIR No.: மு.த.அ. எண் 04/2019 Date: நாள் 01.03.2019

2. (i) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102

(ii) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: Sec.7

(iii) Act சட்டம்: as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 01.03.2019 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு Before 11.05 Hrs on 01.03.2019 Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.03.2019 Time : நேரம் 15.45 மணி

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.03.2019 Time : நேரம் 15.45 மணி

4. Type of Information : Written/ ~~Oral~~ : Written

தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழி~~யாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி About 8 Kms North East

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —

இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.மா.இராசு

(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.மாரியப்பன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 15.09.1962

(d) Nationality : நாட்டினம் இந்தியன்

(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்

Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் இணை ஆய்வுக் குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் இருப்பு திருநெல்வேலி

(g) Address : முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. Tr.P.S Livingston, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi District. (2) Tr.K.Ranganathan, General Assistant, o/o The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Thoothukudi District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் இல்லை

NIL

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed IT. R. Anthus Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் …………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

1.3.19 1.3.19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01.03.2019
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 16.30 Hrs

Name: பெயர் ………………………
Rank: நிலை காவல் ஆய்வாளர் No. எண் ……….
உ.கு.பு.(ம) க.துறை,
திருச்சி

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**Continuation of Thoothukudi Vigilance and Anti-Corruption FIR in Cr.No.04/2019, U/s 102 Cr.P.C and 7 of Prevention of Corruption Act 1988 as Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018.**

**Accused :**

1. Tr.P.S.Livingston,
   District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Thoothukudi.

2. Tr.K.Renganathan,
   General Assistant,
   O/o the District Environmental Engineer,
   Tamil Nadu Pollution Control Board, Thoothukudi.

பணிந்தனுப்பப்படுகிறது,

தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் பிளாட் எண் சி.7 மற்றும் சி.9 –ல் அமைந்துள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் அலுவலகத்தில் மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் நிறுவனங்கள் நிறுவுவதற்கு உரிய இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணை வழங்குதல் மற்றும் ஏற்கனவே பெறப்பட்ட இசைவாணைகளை புதுப்பித்தல் போன்ற அரசு பணிகளுக்கு கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.மா.இராசு அவர்களின் தலைமையில் இன்று (01.03.2019-ஆம் தேதி) காலை 11.05 மணி முதல் 15.00 மணிவரை தூத்துக்குடி பைபாஸ் சாலையில் இருந்து மீளவிட்டான் ரயில் நிலையம் செல்லும் சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட சோதனையின் அடிப்படையில் துணை ஆய்வுக்குழு அலுவலர் கொடுத்த புகார் மனுவை 01.03.2019-ம் தேதி 15.45 மணிக்கு பெற்று இன்று (01.03.2019) 15.45 மணிக்கு தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2019, பிரிவு 102 குவிமுச மற்றும் பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018 படி மார்ஜினில் கண்ட 2 எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விவரம் பின்வறுமாறு அனுப்புனர் மா.இராசு, துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தூத்துக்குடி கன்யாகுமரி மாவட்டங்கள், இருப்பு திருநெல்வேலி. பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு. அய்யா, பொருள்: திடீர் தணிக்கை அறிக்கை - மேல் நடவடிக்கை எடுக்க கோருவது தொடர்பாக. தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் அலுவலகத்தில் மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் மற்றும் அலுவலக ஊழியர்கள் நிறுவனங்கள் நிறுவுவதற்கு உரிய இசைவாணை மற்றும் இயக்குவதற்கான இசைவாணை வழங்குதல் மற்றும் ஏற்கனவே பெறப்பட்ட இசைவாணைகளை புதுப்பித்தல் போன்ற அரசு பணிகளுக்கு கையூட்டு பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் என்னுடைய தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.ஹெக்டர் தர்மராஜ், திரு.A.அண்ணாமலை காவல் ஆய்வாளர் மற்றும் போலீஸ் பார்ட்டி சகிதம் இன்று (01.03.2019) ஆம் தேதி காலை 11.05 மணிக்கு தூத்துக்குடி பைபாஸ் சாலையில் இருந்து மீளவிட்டான் ரயில் நிலையம் செல்லும் சாலையில் பிளாட் எண்.சி7 மற்றும் சி9-ல் அமைந்துள்ள மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் அலுவலத்தில் காலை 11.05 மணிமுதல் மாலை 15.00 மணிவரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலக கட்டிடத்தின் உள்ளே அமைந்துள்ள மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் திரு.P.S.லிவிங்ஸ்டன் என்பவருடைய அறையை சோதனை செய்ய அவரது அறையில் அவரது இருக்கைக்கு பின்பகுதியில் பூட்டப்பட்டு இருந்த மர கப்போர்டை திறக்க சொல்லி சோதனையிட்டதில் D என்று எழுதப்பட்ட காக்கி நிற கவரில் இருந்த ரூ.1,00,000/- (ரூ.2000/- X 50)-ம் அலுவலக பணியாளர் இருந்த அறையில் இருந்த பொது உதவியாளர் திரு.க.ரங்கநாதன் என்பவரின் இருக்கைக்கு அருகில் கீழே இருந்த அவரது கருப்பு நிற ரெக்ஸின் பையில் உள் மையப்பகுதியில் காக்கி நிற கவரில் இருந்த 1,00,000/- (ரூ.2000/- X 50)-ம் மற்றும் அவருடைய மேஜையில் கீழ்பகுதியில் உள்ள கப்போர்டில் இருந்த EMAR மற்றும் சில எழுத்துக்கக்ள் அச்சிடப்பட்ட மஞ்சள் நிற பிக்ஷாப்பர் பையில் உள்ளே இருந்த காக்கி நிற கவரில் இருந்த 60,000/- (ரூ.2000/- X 30)ம் பின் இணைப்பு 1, 2 மற்றும் 3ன்படி கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணத்திற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தாலும் மேற்படி பணம் குற்றமுறு நடவடிக்கையின் மூலம்

நிறுவனங்களிடம் இருந்த லஞ்சமாக பெற்ற பணம் என கருதி சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை நடவடிக்கைகள் (01.03.2019) 11.05 மணக்கு ஆரம்பிக்கப்பட்டு மாலை 15.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி பணம் குற்றமுறு நடவடிக்கையின் மூலம் நிறுவனங்களிடம் இருந்து லஞ்சமாக பெற்று திரு.P.S.லிவிங்ஸ்டன் மற்றும் திரு.க.ரங்கநாதன் ஆகியோர் வைத்துள்ள பணம் என கருதி சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டதால் திரு.P.S.லிவிங்ஸ்டன் மற்றும் திரு.க.ரங்கநாதன் ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். மேலும் இத்துடன் மேற்படி செயல்முறை நடவடிக்கை, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,60,000/-, பின் இணைப்பு 1 முதல் 3 வரை, மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்ட இதர ஆவணங்கள் மற்றும் பொருட்களை தங்கள் வசம் ஒப்படைக்கிறேன். Sd.xxx 1.3.19, (மா.இராசு)துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. Sir, Received the complaint on 01.03.2019 at 15.45 hrs and I am registering a case in Thoothukudi V&AC Cr.No.04/2019, U/s 102 Cr.P.C and u/s 7 of Prevention of Corruption Act 1988 as Amended by The Prevention of Corruption (Amendment) Act 2018, today on 01.03.2019 at 15.45 hrs. Sd/-xxxxx, G.Hector Dharma Raj, Deputy Superintendent of Police, V&AC, Thoothukudi. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.பா.இராசு அவர்களின் அசல் புகார் மனு மற்றும் தூத்துக்குடி மாவட்டம், சிப்காட் தொழிற்சாலை வளாகத்தில் பிளாட் எண் சி.7 மற்றும் சி.9-ல் அமைந்துள்ள தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியம், மாவட்ட சுற்றுப்புற சூழல் நல பொறியாளர் அலுவலகத்தில் வைத்து தயார் செய்த செயல்முறைகள் மற்றும் பின் இணைப்பு 1 முதல் 3 வரை உள்ளதை இணைத்து மேன்மைமிகு தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிமன்ற நடுவர், தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக ஆய்வாளர் திரு.R.ஆதீஸ், காவல் ஆய்வாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

1/3/19

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi